www.Padasalai.Net www.CBSEtips.in

# அரையாண்டு பொதுத் தேர்வு - டிசம்பர் 2019

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | | |

நேரம்:3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்:90

(செய்யுள், உரைநடை)

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப் பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி -I

(1) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1) மண்ணுக்கு வளம் சேர்ப்பன:
அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

2) தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை:
அ) 9 ஆ) 3
இ) 27 ஈ) 13

3) கீழுள்ளவற்றைப் பொருத்தி விடையைத் தேர்வு செய்க.
1) விரியன் i) தண்டை
2) திருகுமுருகு ii) காலாழி
3) நாங்கூழ்ப்புழு iii) சிலம்பு
4) குண்டலப் பூச்சி iv) பாடகம்
அ) 1 - (iii), 2-(iv) 3 - (ii), 4 - (i) ஆ) 1 - (iii), 2-(i) 3 - (iv), 4 - (ii)
இ) 1 - (iv), 2-(iii) 3 - (ii), 4 - (i) ஈ) 1 - (iv), 2-(i) 3 - (iii), 4 - (ii)

4) பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்

5) காவடிச்சிந்தின் தந்தை:
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
இ) முருகன் ஈ) பாரதியார்

6) 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

7) செங்கயல் - இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு:
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உரிச்சொற்றொடர் ஈ) ஈறுகெட்டஎதிர்மறைப் பெயரெச்சம்

8) ஆசிரியப்பாவிற்குரிய ஓசை:
அ) செப்பலோசை ஆ) அகவலோசை
இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

9) Touch Screen - என்பதன் தமிழ்ச்சொல்
அ) திறன்பேசி ஆ) சுற்றறிக்கை
இ) தொடுதிரை ஈ) நுண்கலைகள்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10) உடம்படு மெய்களாக வரும் மெய்யெழுத்துக்கள்:
அ) க், ச் ஆ) ர், ழ்
இ) ய் வ் ஈ) த், ப்

11) கீதாஞ்சலி என்ற கவிதை நூலுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்:
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) தாகூர் ஈ) பிரபஞ்சன்

12) 'சந்தோஷம்' என்ற பிறமொழிச் சொல்லின் தமிழாக்கம்:
அ) மகிழ்ச்சி ஆ) ஆண்டு
இ) உண்மை ஈ) உறுதிமொழி

13) சுடச்சுட - என்பதன் இலக்கணக் குறிப்பு:
அ) பண்புத்தொகை ஆ) அடுக்குத்தொடர்
இ) வினைத்தொகை ஈ) உருவகத்தொடர்

14) யானை டாக்டர் - என்னும் சிறுகதையின் ஆசிரியர்:
அ) புதுமைப்பித்தன் ஆ) பிரபஞ்சன்
இ) ஜெயமோகன் ஈ) சி.சு. செல்லப்பா

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.**

### பிரிவு - I

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15) இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

17) இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

18) எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

### பிரிவு - II

**எவையேனும் இரண்டனுக்கு விடைதருக.** 2×2=4

19) ஐந்து வேளாண்மை மந்திரங்களை எழுதுக.

20) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

21) தாமஸிகம் என்றால் என்ன

### பிரிவு - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடைதருக.** 7×2=14

22) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?

23) ஏதேனும் ஒன்றிற்கு உறுப்பிலக்கணம் தருக.
அ) பிரிந்தோர் ஆ) துய்த்தல்

24) ஏதேனும் ஒன்றிற்கு புணர்ச்சி விதி எழுதுக.
அ) நீரோடை ஆ) சிறுகோல்

25) அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு ஆக்கப்பெயர்களைக் கண்டறிக:
அ) அறிவைத் தேடிப் போகுமிடம்: உலகம் அறிய உதவுமிடம் (அகம்) __________
ஆ) வந்தால் மகிழ்ச்சி இது: உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) ________

26) விகுதிகள் எவற்றை உணர்த்தும்?

27) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.
அறிவில்லாதவன்

28) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



29) தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குப்படுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

30) கலைச்சொல் எழுதுக.
அ) Document ஆ) Agreement

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

### பிரிவு - I

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாக புறநானூறு கூறுகிறது?
33) புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை?
34) வாய்க்காலின் சிறப்புகளாக குறிப்பிடப்படுவன யாவை?

### பிரிவு - II

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
36) ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
37) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
38) மதிப்புக் கூட்டுப் பொருள் என்றால் என்ன?

### பிரிவு - III

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

குறிப்பு: காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண். 42-க்கு பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39) வேற்றுமை அணி (அல்லது) பிறிது மொழிதல் அணியை விளக்கித் தகுந்த குறட்பாவுடன் பொருத்திக் காட்டுக.

40) இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏதேனும் மூன்று நயங்கள் மட்டும்)

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி.*
**பேணி வளர்த்திடும் ஈசன்;**
**மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்**
**கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்**
**காட்சி கெடுத்திட லாமோ?**
**பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்**
**பேதமை யற்றிடும் காணீர்.**
**- பாரதியார்.**

41) பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

42) **தமிழாக்கம் தருக.**
1) Education is the most powerful weapon, which you can use to change the world.
2) Looking at beauty in the world, is the first step of purifying the mind.
3) An eye for an eye only ends up making the whole world blind.
4) You must be the change you wish to see in the world.

42) காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா
பின்வரும் பத்தியைக் கவனமாக படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

தமிழ் மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள், அளவு கடந்து உள்ளன. அவற்றை வெளிக்கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள். இராமேசுவரத்தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்து போன மருங்காப்பட்டிணம் போன்ற தனித்தன்மை கொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன், செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள் அவருடைய 'களப்பிரர்காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட கலப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்றாசிரியர், நடுநிலைப் பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980 - ஆம் ஆண்டு "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்துவமும் தமிழும், சமணமும், தமிழும், பௌத்தமும், தமிழும், மறைந்து போன தமிழ் நூல்கள் போன்ற பல நூல்கால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

**வினாக்கள்:-**

1) மறந்ததும் மறைந்ததும் - இது போன்ற இரண்டு தொடர்களை உருவாக்குக.

2) <u>அழிந்த</u> வரலாறு, <u>புதிய</u> வெளிச்சம் - அடிக்கோடிட்ட சொற்களின் எச்ச வகைகளை எழுதுக.

3) அழியாச் சிறப்பிடம் - இலக்கணக் குறிப்புத் தருக.

4) முதலிய முதலான - பொருளறிந்து சொற்றொடர் அமைக்க.

5) பத்தியில் உள்ள உயர்வு சிறப்பு உம்மையைக் கண்டு எழுதுக.

43) அச்சுப்படி திருத்துபவரின் பணிகளை எழுதுக.

## பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44) அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

**(அல்லது)**

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரண பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க

45) அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன. - கூற்றினை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) 'கல்லும் கதைசொல்லும்' - என்னும் தொடர் தஞ்சை பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46) அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுப்படுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

47) **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

அ) ஏது தொட்க்கி வைத்து - எனத் தொடங்கும் பாடலை எழுதுக. 4

ஆ) தாளாற்றி எனத் தொடங்கும் குறளை எழுதுக. 2

***************